# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16297/SCIC/2025**

திரு து. புருஷோத்தமன் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர் 603 110
செங்கல்பட்டு மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்போரூர் 603 110
செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 12.04.2024 |
| 2. | மனுதாரரின் மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் | 01.05.2024<br>20.06.2024<br>16.08.2024 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 16.08.2024 |

| | | |
|---|---|---|
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 25.07.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 31.07.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 07.11.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 12.04.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில், 01.01.1954ம் ஆண்டு முதல் 30.12.1957ம் ஆண்டு வரையில் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு சொத்துக்களை பதிவு செய்யும் போது முத்திரைத்தாள் வரி செலுத்தியவர்கள் குறித்த தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார். மனுதாரரின் மனுவானது 01.05.2024 தேதியிட்டு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருப்போரூர் என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மனுதாரரின் மனுவானது மீண்டும் 16.08.2024 தேதியிட்டு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்போரூர் என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு அதன் விவரமும் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு T. அரிகணேச பாண்டியன், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்போரூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார். **திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆணையத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னரும் இன்றைய விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தால் அவர் மீது சட்டப்பிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை 15.10.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு மேற்படி அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான திருப்போரூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் 20.09.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் கோரிய பதிவேடுகள் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்ற தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார். அதற்கு மனுதாரர் தான் கோரிய தகவல்கள் தொடர்பான பதிவேடுகள் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிப்பில் இருக்குமென்று எடுத்துரைத்தார்.

4. **எனவே, மனுதாரர் 30.09.2026 அன்று முற்பகல் 11 மணிக்கு திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்லுமாறும், அன்றைய தினம் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர்**

**கோரிய தகவல்கள் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், அதனடிப்படையில் மனுதாரர் தனது மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவண நகல்களை உரிய சான்றொப்பமிட்டு மனுதாரருக்கு வழங்குமாறும், அதுகுறித்த அறிக்கை மற்றும் ஆணையத்தின் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகாததற்கான தனது காரணம் கேட்பு குறிப்பாணை விளக்கம் ஆகியவற்றை 15.10.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவருக்கு உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16297/SCIC/2025</u>**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர் 603 110

திரு தனசேகர்,
பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர் 603 110
செங்கல்பட்டு மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்போரூர் 603 110
செங்கல்பட்டு மாவட்டம்.

**மனுதாரர்**
திரு து. புருஷோத்தமன்,
த/பெ துரை,
4/63, பாரதியார் தெரு,
13, சிறுசேரி கிராமம்,
செங்கல்பட்டு 600 130

நகல்
பதிவுத்துறைத் தலைவர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

TK/PS